## இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
## பாராளுமன்றம்

---

# 2003 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, இந்திய வம்சாவழி யினரான ஆட்களுக்கு பிரசாவுரிமை வழங்கல் சட்டம்

---

*(2003 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 11 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

2003, நவெம்பர் மாதம் 14 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 1. அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக் கொள்ளலாம்

# 2003 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, இந்திய வம்சாவழி யினரான ஆட்களுக்கு பிரசாவுரிமை வழங்கல் சட்டம்

[2003 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 11 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச. வ.- ஒ. 29/2003
4462

## இந்திய வம்சாவழியினரான ஆட்களுக்கு இலங்கைப் பிரசை என்ற அந்தஸ்தை வழங்குவதற்கு ஏற்பாடு செய்வதற்கான தொரு சட்டம்

முறையே 1964, ஒற்றோபர் 30 ஆம் திகதி மற்றும் 1974 சனவரி 27 ஆம் திகதி இலங்கை இந்திய உடன்படிக்கை என குறிப்பீடு செய்யப்படும் இலங்கையிலுள்ள இந்திய வம்சாவழியினரான ஆட்களின் அந்தஸ்துத் தொடர்பாகவும், அத்தகைய ஆட்களின் எதிர் காலம் தொடர்பாகவும் இலங்கை அரசாங்கத்திற்கும் இந்திய அரசாங்கத்திற்கும் இடையே 1964, ஒற்றோபர் 30 ஆம் திகதியன்று புதுடில்லியில் கடிதப் பரிமாற்றம் பயனுறுத்தப்பட்டுள்ளதாதலா லும் (1964 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க ஒப்பந்த உடன்படிக்கை தொடராக வெளியிடப்பட்டுள்ளது) ; அத்துடன் இலங்கையிலுள்ள இந்திய வம்சாவழியினரான ஆட்களின் அந்தஸ்து தொடர்பாக வும், அத்தகைய ஆட்களின் எதிர்காலம் தொடர்பாகவும் இலங்கை அரசாங்கத்திற்கும், இந்திய அரசாங்கத்திற்கும் இடையே 1974 சனவரி 27 ஆம் திகதியன்று புதுடில்லியில் கடிதப் பரிமாற்றம் பயனுறுத்தப்பட்டுள்ளதாதலாலும் (1974 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க ஒப்பந்த தொடராக வெளியிடப்பட்டுள்ளது) :

அத்துடன் சொல்லப்பட்ட உடன்படிக்கை திகதியிலிருந்து பதினைந்து வருடகாலப் பகுதிக்குள்ளாக நாடற்றோர் பிரச் சினையை தீர்ப்பதற்கு இலங்கை அரசாங்கமும், இந்திய அரசாங்கமும் உடன்பட்டுக்கொண்டுள்ளதாதலாலும் :

அத்துடன் எதிர்பாராத குறித்த சந்தர்ப்பசூழ்நிலை காரணமாக மேற்கூறப்பட்ட உடன்படிக்கையைப் பின்பற்றிப் பொறுப்பேற்கப் பட்ட கடப்பாடுகள் நிறைவேற்றப்படாதிருக்கின்றனவாதலாலும் 1986 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க நாடற்ற ஆட்களுக்குப் பிரசா வுரிமை வழங்குதல் சட்டத்தின் ஏற்பாடுகளும் 1988 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க, நாடற்ற ஆட்களுக்கு பிரசாவுரிமை வழங்குதல் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டத்தின் ஏற்பாடுகளும் எப்படி இருப்பினும், இந்திய வம்சாவழியினரான 5,06,000 ஆட்களில், சிலருக்கு இந்திய பிரசாவுரிமை வழங்கப்படாதிருப்பதோடு வேறு சிலருக்கு பிரசாவுரிமை வழங்கப்பட்டு அவர்கள் தொடர்ந்தும் இலங்கையில் வாழ்ந்து வருகின்றனர் ஆதலாலும் :

அத்துடன் இந்திய வம்சாவழியினரான ஆட்களின் பிரசாவுரிமை பிரச்சினை தேசிய நலன்கருதி தீர்க்கப்பட வேண்டும் என்பதனாலும் :

ஆகவே, இப்பொழுது, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப் படுவதாகுக :-

சுருக்கப்பெயர்.

1. இச்சட்டம் 2003 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க இந்திய வம்சாவழியினரான ஆட்களுக்கு பிரசாவுரிமை வழங்கல் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

குறித்த சில ஆட்களுக்கு இலங்கை பிரசை அந்தஸ்தை வழங்கல்.

2. இச்சட்டம் நடைமுறைக்கு வரும் திகதியன்று -

(அ) 1964, ஒற்றோபர் 30 ஆம் திகதி தொடக்கம் இலங்கையில் நிரந்தரவாசியாக இருந்துள்ளவரான ; அல்லது

(ஆ) 1964, ஒற்றோபர் 30 ஆம் திகதி தொடக்கம் இலங்கையில் நிரந்தரவாசியாக இருந்துள்ளவரான ஆள் ஒருவரின் இலங்கையில் வதிகின்ற சந்ததியினரான ,

இந்திய வம்சாவழியினரான ஆள் எவருக்கும், அத்தகைய திகதி தொடக்கம் இலங்கைப் பிரசை ஒருவர் என்ற அந்தஸ்து வழங்கப்படுதல் வேண்டும் என்பதுடன், இலங்கை பிரசை ஒருவர் சட்டப்படி உரித்துடைய எல்லா உரிமைகளுக்கும், சிறப்புரிமைகளுக்கும் அதேமுறையிலும் அதே அளவிலும் அவர் உரித்துடையவர் ஆதலும் வேண்டும் :

ஆயின், எவ்வாறாயினும் இச்சட்டம் நடைமுறைக்குவரும் திகதியன்று இந்திய கடவுச்சீட்டொன்றை அல்லது அதையொத்த வேறு ஆவணத்தை வைத்திருக்கின்றவரான நிரந்தரவாசி ஒருவருக்கு இலங்கைப் பிரசை ஒருவர் என்ற அந்தஸ்து வழங்குதலானது, அட்டவணையில் தரப்பட்டுள்ள விசேட வெளிப்படுத்துகை படிவத்தில் இலங்கைப் பிரசாவுரிமையை தன்னிச்சையாகக் கொள்ளுவதற்கான அவரது உட்கருத்தைத் தெரிவித்து வெளிப்படுத்துகையொன்றை ஆணையாளருக்கு அவர் அனுப்பிவைத்து, அத்தகைய வெளிப்படுத்துகை பெறப்பட்டுள்ளதாக ஆணையாளரினால் எழுத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டதன் மீது மாத்திரமே பயனுடையதாக வருதல் வேண்டும்.

3. இரண்டாம் பிரிவின் ஏற்பாடுகளின் பயனைக் கொண்டு, இலங்கை பிரசை என்ற அந்தஸ்தைக் கொள்ளுகின்ற ஒவ்வொரு ஆளும் —

இலங்கை பிரசை அந்தஸ்தை கொள்வதன் மீதுள்ள உரிமைகளும் பொறுப்புக்களும்.

(அ) சட்டத்தினால் அங்கீகரிக்கப்பட்டவாறான இலங்கைப் பிரசை ஒருவருக்குள்ள உரிமைகளுக்கும் சிறப்புரிமைகளுக்கும் உரித்துடையவராக இருப்பதுடன் மேலதிகமாக, இலங்கையின் பிரசை எவருக்கும் ஏற்புடைத்தான அதே முறையிலும் அதே அளவுக்கும் பிரசாவுரிமை பறிக்கப்படுதல், அத்துடன் அதனை இழத்தல் மற்றும் பிரசாவுரிமையைக் கைதுறத்தல் தொடர்பிலான ஏற்பாடுகளுக்கு அமைந்தவராலும் வேண்டும் ; அத்துடன்

(ஆ) இச்சட்டம் நடைமுறைக்கு வருவதிலிருந்தும் அதன் பின்னரும் இச்சட்டம் பிரகடனப்படுத்தப்படாவிட்டால், அத்தகைய ஆளின் அல்லது விடயத்துக்கேற்றாற்போல, அத்தகைய ஆளின் பெற்றோரின், முற்சந்ததியினரின் அல்லது கணவனின் மூலநாட்டில் வலுவில் இருக்கும் ஏதேனும் சட்டத்தின்கீழ் அத்தகைய ஆள் உரித்துடையவராகக்கூடிய அல்லது உரித்துடையவராக இருந்திருக்கும் குடியியல் மற்றும் அரசியல் அந்தஸ்துக்கான எல்லா உரிமைகளையும் கைதுறந்து விட்டுள்ளவராகக் கருதப்படுதல் வேண்டும் ; அத்துடன்

(இ) அந்தஸ்து, ஆள்சார் உரிமைகள், கடமைகள் மற்றும் இலங்கையில் ஆதனம் வைத்திருத்தல் என்பன தொடர்பிலான அல்லது என்பனவற்றோடு தொடர்புபட்ட எல்லாக் கருமங்களிலும் இலங்கையின் இயைபான சட்டங்களுக்கு அமைந்தவராக இருத்தல் வேண்டும்.

4. (1) இரண்டாம் பிரிவின் ஏற்பாடுகளின் பயனைக்கொண்டு இலங்கைப் பிரசை ஒருவராக வருகின்ற எவரேனும் ஆள், அவர் அவ்வாறு விரும்பினால் இச்சட்டத்திற்கான அட்டவணை அ என்பதில் தரப்பட்டுள்ள பொருளளவிலான படிவத்தில் பிரசாவுரிமை சான்றிதழ் ஒன்றுக்காக ஆணையாளருக்கு விண்ணப்பிக்கலாம். ஒவ்வொரு விண்ணப்பமும் அதே அட்டவணையில் தரப்பட்ட படிவத்திலான சத்தியத்தின்கீழ் செய்யப்பட்ட பொது வெளிப்படுத்துகைப் படிவத்துடன் சேர்த்தனுப்பப்படுதல் வேண்டும்.

பிரசாவுரிமை சான்றிதழுக்கு விண்ணப்பித்தல்.

(2) ஆணையாளர், (1) ஆம் உட்பிரிவின் கீழான விண்ணப்பம் அவரால் பெற்றுக்கொள்ளப்பட்ட அறுபது நாட்களுக்குள்ளாக இச்சட்டத்திற்கான அட்டவணை ஆ என்பதில் தரப்பட்டுள்ள பொருளளவிலான படிவத்தில் இருக்கவேண்டிய சான்றிதழ் ஒன்றை விண்ணப்பதாரருக்கு வழங்குதல் வேண்டும்.

(3) ஆணையாளர், 1967 ஆம் ஆண்டின் 14 ஆம் இலங்கை இந்திய உடன்படிக்கை (அமுல்படுத்தல்) சட்டத்தின்கீழும் 1988 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க, நாடற்ற ஆட்களுக்குப் பிரசாவுரிமை வழங்குதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழும் சான்றிதழ் வழங்கப்பட்டிராத ஆட்களுக்கு மாத்திரம் இப்பிரிவின் கீழ் சான்றிதழ் வழங்குதல் வேண்டும்.

(4) ஆள் எவரும் தகுதிவாய்ந்த நியாயாதிக்கமுள்ள நீதிமன்றத்தினால் தவிர, எத்தன்மைக்கான எந்நோக்கத்துக்காகவும் (1) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி வழங்கப்பட்ட சான்றிதழைக் காண்பிக்குமாறு தேவைப்படுத்தப்படுதல் ஆகாது ; அத்துடன் அதற்கு எண்பிப்பாக சத்தியக்கடதாசி ஒன்று சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும் ; அச்சத்தியக்கடதாசி அதன் முதற்றோற்றளவிலான எண்பிப்பாக ஏற்றுக்கொள்ளப்படற்பாலதாதல் வேண்டும்.

*சட்டம் ஏனைய சட்டங்களை மேலோங்கி நிற்றல்.*

5. இச்சட்டமானது, இலங்கைப் பிரசை அந்தஸ்தை வழங்குதல் தொடர்பிலான வேறு ஏதேனும் சட்டத்தில் முரணாகவுள்ளது எது எப்படியிருப்பினும் அதனை மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பொருள் கோடல்.*

6. இச்சட்டத்தில் "ஆணையாளர்" என்பது 1967 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, இலங்கை இந்திய உடன்படிக்கை (அமுல்படுத்தல்) சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட இந்திய வம்சா வழியினரான ஆட்களைப் பதிவுசெய்வதற்கான ஆணையாளர் என்று பொருளாகும்.

*ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

7. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனுட ஒவ்வாமை காணப்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

## அட்டவணை அ

(பிரிவுகள் 2, 4)

### 2003 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, இந்திய வம்சாவழியினரான ஆட்களுக்கு பிரசாவுரிமை வழங்கல் சட்டம்

### பிரசாவுரிமைச் சான்றிதழுக்கான விண்ணப்பம்

1. விண்ணப்பகாரரான*/பராயமடையாத பிள்ளையான ...................... .............................என்பவரின் பெற்றார் *................................... ...............ஆகிய நான், மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 4 ஆம் பிரிவின் நியதிகளின்படி எனக்காக */மேற்சொல்லப்பட்ட எனது பிள்ளைக்காக* பிரசாவுரிமைச் சான்றிதழ் ஒன்றுக்கு இத்தால் விண்ணப்பிக்கிறேன்.

2. மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 2 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பயனைக் கொண்டு நான் /* மேற்கூறப்பட்ட எனது பிள்ளை* இலங்கைப் பிரசையென இத்தால் வெளிப்படுத்துகிறேன்.

3. என்னைப் பற்றிய/மேற்சொல்லப்பட்ட எனது பிள்ளை பற்றிய* விபரங் களைக் கீழே தருகிறேன்.

(அ) முழுப் பெயர் :

(ஆ) முகவரி :

(இ) பால். ஆண்/பெண் :

(ஈ) பிறந்த திகதி :

(உ) பிறந்த இடம் :

(ஊ) இலங்கைக்கு வெளியே பிறந்திருந்தால்,

பிறப்பைப் பதிவு செய்த இடம் :

(எ) பெற்றார் பற்றிய விபரங்கள் :

| தந்தை | தாய் |
|---|---|
| பெயர் : | பெயர் : |
| இலங்கைப் பிரசையா? | இலங்கைப் பிரசையா? |
| தே.அ.அ. இல. (இருந்தால்) : | தே.அ.அ. இல. (இருந்தால்) : |
| வதிவிட முகவரி : | வதிவிட முகவரி : |

* பொருந்தாதவற்றை நீக்கிவிடுக.

### பொது வெளிப்படுத்துகைப் படிவம்

4. நான்/மேற்சொல்லப்பட்ட எனது பிள்ளை வேறு எந்த நாட்டிலுமன்றி, இலங்கையில் வதிபவர் என வெளிப்படுத்துகிறேன்.

மேற்போந்த விவரங்கள் எனக்கு நன்கு தெரிந்தவரை உண்மையானவை என பயபக்தியுடனும் விசுவாசமாகவும் உண்மையாவும் வெளிப்படுத்தி உறுதிப் படுத்துகிறேன்./சத்தியஞ் செய்கிறேன்.

..............................................
விண்ணப்பகாரரின் கையொப்பம்
அல்லது கைப் பெருவிரலடையாளம்.

திகதி : ......................................

என் முன்னிலையில் ............... ஆம் ஆண்டு ......................... மாதம் ..................... ஆந் நாளாகிய இன்று *உறுதிப்படுத்தப்பட்டது/சத்தியஞ் செய்யப்பட்டது.

..............................................
சமாதான நீதிவானின் அல்லது
சத்திய ஆணையாளரின் ஒப்பம்.

சமாதான நீதிவானின் அல்லது
சத்திய ஆணையாளரின் பெயரும், முகவரியும் .........................

திகதி ....................................

### விசேட வெளிப்படுத்துகைப் படிவம்

5. (அ) நான் இந்தியப் பிரசைவுரிமையைத் தன்னிச்சையாகப் பெற்றுக் கொண்ட போதிலும், 1964 ஒற்றோபர் 30 ஆந் திகதி தொடக்கம் வேறு எந்த நாட்டிலும் அன்றி, இலங்கையில் நிரந்தரமாக வசித்து வந்துள்ளேன் எனவும் வசிப்பவர் எனவும் இலங்கை பிரசைவுரிமையைத் தன்னிச்சையாகக்கொள்ளு கிறேன் என்றும்,/இலங்கையில் தொடர்ந்து வசித்து வருவேன் எனவும், வெளிப் படுத்துகிறேன்.

(ஆ) நான்/மேற்சொல்லப்பட்ட எனது பிள்ளை வேறு எந்த நாட்டிலுமன்றி இலங்கையில் வதிபவர் என வெளிப்படுத்துகிறேன்.

மேற்போந்த விவரங்கள் எனக்கு நன்கு தெரிந்தவரை உண்மையானவை என பயபக்தியுடனும், விசுவாசமாகவும் உண்மையாகவும் வெளிப்படுத்தி உறுதிப் படுத்துகிறேன்/சத்தியஞ் செய்கிறேன்.

திகதி ..............................................

..............................................
விண்ணப்பகாரரின் கையொப்பம்
அல்லது கைப் பெருவிரலடையாளம்.

என் முன்னிலையில் .............. ஆம் ஆண்டு ...................... மாதம் ..................... ஆந் நாளாகிய இன்று உறுதிப்படுத்தப்பட்டது/*சத்தியஞ் செய்யப்பட்டது.

......................................
சமாதான நீதிவானின் அல்லது
சத்திய ஆணையாளரின்
ஒப்பம்

சமாதான நீதிவானின் அல்லது
சத்திய ஆணையாளரின் பெயரும், முகவரியும் ......................

திகதி ..................................

**அட்டவணை ஆ** [பிரிவு 4]

**2003 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, இந்திய வம்சாவழியினரான ஆட்களுக்கு பிரசாவுரிமை வழங்கல் சட்டம்**

**பிரசாவுரிமைச் சான்றிதழ்**

மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 4 ஆம் பிரிவின் ஏற்பாடுகளினால் எனக்குரித் தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு, இந்திய வம்சாவழியினரான ஆட்களைப் பதிவு செய்வதற்கான ஆணையாளர் ...................... ஆகிய நான் ...................... (முகவரியைக் கூறுக) என்னும் முகவரியைச் சேர்ந்த ...................... (பெயர் குறிப்பிடுக) என்பவர் 2 ஆம் பிரிவின் ஏற்பாடு களின் பயனைக் கொண்டு இலங்கைப் பிரசையொருவர் ஆவார் என இத்தால் அத்தாட்சிப்படுத்துகிறேன்.

**பிரசை தொடர்பான விவரங்கள் :**

பெயர் : ......................

பிரசையாகவுள்ள/பிரசைகளாகவுள்ள பெற்றோர்களின் பெயர் :

1. ......................
2. ......................

பிறந்த தேதியும் இடமும் :......................
பால் :......................
அடையாள அட்டை இலக்கம் (இருப்பின்) :......................

.............................................
இந்தியவம்சாவழியினரான ஆட்களைப்
பதிவு செய்வதற்கான ஆணையாளர்

திகதி ......................

*பொருந்தாதவற்றை நீக்கிவிடுக.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387; (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல.32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ் ரோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.